# அன்பு பகிர்வு இயக்கம்

செய்திமலர்

ஆண்டு சந்தா ரூ.60/-

மலர்: 4

இதழ் : 4

பிப்ரவரி 2008



**பரிசுத்த ஆவி
உங்களிடத்தில்
வரும் போது நீங்கள்
பெலனடைந்து ....
பூமியின் கடைசிபரியந்தமும்,
எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.**

அப். 1 : 8

ஆசிரியர் : சகோ. வே. தேவதாஸ்

## சுதேச ஊழியர் சாட்சி - சகோ. சர்தார் டாமோர்



இவருடைய பெயர் சர்தார்பாய். இவர் இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் டுங்கரா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இவருடைய பெற்றோர்கள் கத்தோலிக்க சபையைச் சேர்ந்தவர்கள். ஆனால் இயேசு, இரட்சிப்பு என்பதைப் பற்றி எந்த அறிவும் கிடையாது. பிறஇனத்தவர்கள் போன்று சாராயம், பீடி இவைகளுக்கு அடிமையாயிருந்தார்கள். இவர் இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது வியாதியினால் மிகவும் பாதிக்கப்பட்டார். இவருக்காக இவரது பெற்றோர்கள் அதிகமான பணம் செலவு செய்தார்கள் இருந்தும் இவர் பிழைப்பார் என்றநம்பிக்கை யாருக்கும் ஏற்படவில்லை. இவருடைய பெற்றோர்கள் இவரை கத்தோலிக்க பாதிரியாரிடமும் கொண்டு சென்றார்கள். அவரும் கூட உங்கள் மகன் பிழைக்க வழியே இல்லை, சீக்கிரம் மரித்துவிடுவான் என்று கூறினார். கடைசியாக இவருடைய பெற்றோர் ஒரு பொருத்தனை செய்தார்கள். எங்களது மகன் பிழைத்தால் அவனை ஊழியத்திற்கென்று அர்ப்பணிக்கிறோம் என்று கூறினார்கள். தேவன் அவர்கள் பொருத்தனைக்கு செவி கொடுத்தார். இவருக்கு நல்ல சுகம் பெலன் கொடுத்தார். இவர் 8ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும்போது இவருடைய தாயாருக்கு தீய ஆவியினால் கண்பார்வை திடீரென்று பாதிக்கப்பட்டது. இவர்கள் மிக அதிகமான பணத்தினை மருத்துவர்களுக்கும், மந்திரவாதிகளுக்கும் செலவு செய்தார்கள். ஆனாலும் இவருடைய தாயாருக்கு கண்ணில் ஒளி கிடைக்கில்லை. இந்த நேரத்தில் ஒரு சுதேச ஊழியர் வாரம்தோறும் கோய்க்கா என்றகிராமத்தில் சுகமளிக்கும் கூட்டம் நடத்துவதாக கேள்விப்பட்டார்கள். அங்கு அவருடைய அம்மாவை அழைத்துச் சென்றார்கள். இவர்கள் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொண்டு கண்ணீரோடு ஜெபித்தார்கள். மிஷனெரி சகோதரர் தன் கரங்களை இவருடைய தாயாரின் தலையில் வைத்து ஆவியில் நிறைந்து ஜெபித்தபோது தீய ஆவி அலறிக்கொண்டு ஓடியது. அந்த நிமிஷத்தில் தானே இவருடைய தாயாரின் கண்கள் திறந்தது. இவருடைய பெற்றோர்களும் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள்.

இதற்கு பின்பு இவர்முழுநேர ஊழியம் செய்யும்படியாக இவரை அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஜாபுவா மாவட்டத்தில் காலகேத் மையமாக வைத்து தேவனுடைய பணியை செய்து வருகின்றார்.

இவரை தாங்குபவர்: **Faith Bethesda Prayer Group** - Arumuganeri.

## ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்கள் அன்பு வாழ்த்துக்கள். தேவன் தந்த புதிய மாதத்திற்காக தேவனைத் துதிப்போம்.

பீல் மக்கள் மத்தியில் இந்த ஆண்டிலும் புதிய காரியங்களை செய்து வருகிறார். ஜனவரி மாதத்தில் சுதேச ஊழியர்கள் குடும்ப கூடுகையை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்துள்ளார். ஆதி 15:1 வாக்குத்தத்த செய்தியின்படி எண்ணக்கூடாத அளவிற்கு ஆத்துமாக்களையும், தேசத்தையும் தேவன் நமக்கு தந்து ஆசீர்வதிப்பார்.

1–2–2008 முதல் நம் பணித்தள அலுவலகத்தில் Administrator பொறுப்பை Bro. Jeyaraj அவர்கள் ஏற்கிறார்கள். உத்திரப்பிரதேசம், மஹாராஷ்டிராவில் Mission களில் பொறுப்பாக இருந்தவர்கள் தேவனுடைய அபிஷேகத்தையும், தாலந்துகளையும் பெற்றவர்கள். நம் ஊழியத்தை ஸ்திரப்படுத்தவும், ஒழுங்குகளை, நியமங்களை ஊழியர்களுக்கு கற்றுக் கொடுத்து சிறந்த பீல் தலைவர்களை உருவாக்கவும் அவர்களுடைய பணி சிறக்க ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

இம்மாதத்தில் 10 கிராமங்களில் கட்டப்படும் ஆலயங்கள் தடையின்றி கட்டப்பட ஜெபியுங்கள். Caruna Balvilas மூலமாக “ஹிரோலா”விற்கு அடுத்து “ஜெரி” கிராமத்தில் 100 ஆதிவாசி மாணவர்களுக்கு Child Development Programme ஆரம்பிக்க தேவன் கிருபை தந்துள்ளார். தேவனைத் துதித்து அதற்காகவும் ஜெபியுங்கள். நம் சுதேச ஊழியர்களின் 67 பேர்கள் B.Th (Hindi Medium) Correspondence Course மூலமாக இம்மாதம் 4வது Seminar Exams 7,9,12 ஆகிய தேதிகளில் எழுதுகிறார்கள் இதற்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன். மேலும் 300 கிராமங்களில் ஞாயிறு பள்ளி நேர்த்தியாக செயல்படுத்த சிறப்பு பயிற்சியை 300 ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி நான்கு பிரிவாக பிப்ரவரி 18 – 26 வரை சகோதரி வஹிதா தேவதாஸ் தலைமையில் நடைபெற உள்ளது. அதற்காக ஜெபியுங்கள்.

23.02.2008 சனிக்கிழமை என்னுடைய பிறந்தநாள். 48 வருடங்களை காணச் செய்த தேவனைத் துதிக்கிறேன். 30 வருடங்களுக்கு முன்பாக உலகத்தில் சமாதானம், அன்பு கிடைக்கவில்லை என உயிரை மாய்த்துக் கொள்ள நினைத்தபோது கல்வாரி அன்பு என்னைச் சந்தித்தது. இயேசு என்னை ஆசீர்வதித்து பீல் மக்கள் ஊழியத்தை தந்து ஜாதிகளுக்கு ஆசீர்வாதமாக வைத்தார். தேவனுக்கே மகிமை! எனக்காக, கர்த்தர் என்னை பயன்படுத்த அந்நாளில் எனக்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

**“உன்னதத்தி–ருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும்; அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும்”** – ஏசாயா 32 : 15.

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468

# பரிசுத்த ஆவியானவர்

சிறப்பு செய்தி : சகோதரி வஹிதா தேவதாஸ்

**"கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்"** என்று நமக்கு வாக்களித்த சர்வ வல்லவருடைய நாமத்தில் வாழ்த்துக்கள்...

**பரிசுத்த ஆவியானவர் யார்?**

ரோமர் 8:9ல் கூறப்பட்டுள்ளபடி பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆவியானவர். கிறிஸ்துவினுடைய ஆவியானவர் என்றும் நமக்கு தெளிவாகிறது.

கிறிஸ்துவே ஆவியானவர், கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த பூலோகத்தில் பிறந்து, வளர்ந்து, 3½ வருடங்கள் வல்லமையாய் ஊழியம் செய்தார். சீஷர்களை எழுப்பி உருவாக்கினார். கடைசியில் அவருடைய 3½ வருட ஊழியத்தை முடித்து மரணத்திற்கு ஆயத்தமாகும்போது, சீஷர்களிடம் பரிசுத்த ஆவியானவர் பற்றி கூறினார். ஏனென்றால் சீஷர்கள் கலங்கினார்கள். இனிமேல் யார் எங்களோடு கூட இருப்பார்? யார் இப்படி அற்புத அடையாளங்களைச் செய்வார்? என்று திகைத்துப் போனார்கள்.

அப்பொழுதான் இயேசு சொன்னார் யோவான் 14ம் அதிகாரத்தில் "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்றும், 16–ம் வசனத்தில் என்றென்றைக்கும் "உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அனுப்புவேன்" என்றும், 17–ம் வசனத்தில் "அவர் (பரிசுத்த ஆவியானவர்) உங்களுடனே வாசம் பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பார்" என்றும் பலவாறு பரிசுத்த ஆவியானவர் பற்றி கூறி சீஷர்களை தேற்றினார் மட்டுமல்லாமல் இயேசுவானவர் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த பின்பும், யோவான் – 20 : 22–ல் அவர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொள்ளுங்கள் என்று எவ்வளவு வாஞ்சையாய் இயேசு கூறியிருக்கிறார் என்று பாருங்கள். நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்பது தான் உயிர்த்தெழுந்த இயேசுவின் வாஞ்சை. பிரியமானவர்களே பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வரும்போது கிடைக்கும் ஆசீர்வாதங்கள் என்ன என்று பார்ப்போம்.

முதலாவதாக நாம் தேவனுடைய ஆலயமாகிறோம். (1கொரி. 3:16-17.)

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?

ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்.

தேவனுடைய ஆவி நமக்குள் வாசமாயிருக்கும் போது, நம்முடைய இருதயம் ஆலயமாகிறது. நமது இருதயமாகிய ஆலயம் பரிசுத்தமாய் பாதுகாக்கப்பட வேண்டும். பரிசுத்தமாய் பாதுகாக்கும்படியாக பரிசுத்த ஆவியானவர் நமக்குள் தங்கியிருக்கிறார்.

❖ எப்படி நம் இருதயம் தேவனுடைய ஆலயமாகிறது?

முதலாவதாக எரேமியா – 19:9 இவ்வாறு கூறுகிறது "இருதயம் திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது". ஆகையால் தான் மனிதருடைய இருதயத்தை பாவம், அசுத்தம், கெட்ட சுபாவங்கள் நிறைக்கப்பட்ட தேவனுடைய ஆலயம் கெடுக்கப்படுகிறது. இயேசுவின் இரத்தம் நம்மை பழைய பாவங்களில் இருந்து கழுவி சுத்திகரிக்கிறது. இயேசுவின் இரத்தத்தினால் நமது இருதயம் கழுவப்பட்டால் தான் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ண முடியும். பரிசுத்த ஆவியானவர் இருதயத்தில் வாசம் பண்ணும் போது தான் நாம் அவருடைய ஆலயமாக இருக்க முடியும்.

இரண்டாவதாக, நவமான இருதயம், மற்றும் புதிதான ஆவியை தருகிறார். எசேக்கியேல் 36:26,27–ல் "கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை தருகிறார்." நவமான இருதயத்தைக் கொடுத்து, புதிதான ஆவியைக் கட்டளையிடுகிறார். உள்ளத்திலே என் ஆவியை வைத்து, அவருடைய கட்டளைகளில் நடக்கவும், நியாயங்களைக் கைக்கொள்ளவும், அவைகளின்படி செய்யவும் பண்ணுகிறார். யோவான்–16:8ல் "பரிசுத்த ஆவியானவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துவார்".என்று வேதம் கூறுகிறது.

❖ இரண்டாவதாக நாம் விடுதலையாகிறோம். 2 கொரி. 3:17

ஆவியானவர் எங்கு உண்டோ, அங்கு விடுதலை உண்டு... ஆவியானவர் நமக்குள் வரும்போது நாம் பாவம், சாபம், வியாதி, பிசாசு இவற்றில் இருந்து விடுதலை பெற்றவர்களாக வாழ்கிறோம். ரோமர் 8:11–ல் இயேசுவை மரித்தோரில் இருந்து எழுப்பினவருடைய ஆவி

உங்களில் வாசமாயிருந்தால் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ரோமர் 8:2 இவ்வாறு கூறுகிறது, ஆவியின் பிரமாணம் என்னை பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்று. பீல் மக்கள் மிகவும் குடிகாரர்கள். 24 மணிநேரமும் குடித்து கொண்டேயிருப்பார்கள் மட்டுமல்ல கொள்ளையடிப்பவர்கள், பில்– சூனியத்திற்கு அடிமையானவர்கள். இப்பொழுது இவர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். தீராத குடிப்பழக்கத்தி– ருந்து விடுதலை பெற்றவர்களின் எண்ணிக்கை ஏராளம். ஆவியானவர் எங்கு உண்டோ அங்கு விடுதலை உண்டு.

பீல் மக்கள் இறந்தவர்களின் ஆவியை வணங்கி மற்றும் மந்திர பூஜைகளை செய்து மட்டுமல்லாமல் கொள்ளையடித்து இவர்கள் சாபத்துக்குள்ளாகி வாழ்ந்தார்கள். இன்று இயேசு இவர்கள் வாழ்க்கையில் பிரவேசித்திருக்கிறார். பரிசுத்த ஆவியானரின் அருள்மாரி ஊற்றப்பட்டு கொண்டிருக்கிறது. சுமார் 20,000 குடும்பங்கள் சாபங்களினின்று விடுதலை பெற்று தேவனை துதிக்கிறார்கள். மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் ஷாலோம் ஊழியர்களை தேடிவந்து ஜெபித்தவர்கள் வியாதியி– ருந்து விடுதலை பெற்றது மட்டுமல்லாமல், விடுதலையோடு சாட்சியாய் வாழ்ந்து வருகிறார்கள். இதற்கு காரணம் பரிசுத்த ஆவியானவர் இவர்களுக்குள் தங்கி வாசம் பண்ணுகிறார்.

பலவிதமான அசுத்த ஆவியினாலும் பில்– சூனியங்கினாலும் அலைக்கழிக்கப்பட்ட இந்த மக்கள் இயேசுவின் நாமத்தில் விடுதலை பெற்று, ஆவியானவருடைய அபிஷேகத்தைப் பெற்று, பிசாசை மேற்கொண்டு வல்லமையோடு பயமின்றி வாழ்கிறார்கள். ஆவியானவர் எங்கே உண்டோ அங்கு விடுதலை உண்டு.

❖ **மூன்றாவதாக நாம் பெலனடைகிறோம். அப். 1:8**

“பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து” என்று வாசிக்கிறோம். சாட்சியாய் வாழும் பெலன்.,

நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தம் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள். இந்த உன்னதமான பெலன் இல்லையென்றால் பாவமான உலகில் நாம் சாட்சியாய் வாழ்வது என்பது மிகவும் கடினமான காரியம். கிறிஸ்தவர்கள் என்று எல்லோராலும் அறியப்படுகிற நாம் அந்த மரியாதையை காப்பாற்றுகிறவர்களாக கிறிஸ்துவுக்கு சாட்சியாய் வாழ்ந்து காட்ட வேண்டும். மனுஷர் நம்முடைய நற்கிரியைகளை கண்டு, பரலோகத்தி– ருக்கிற பிதாவை மகிமை

படுத்தும்படியாக நம்முடைய வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்க வேண்டும். நம்முடைய வெளிச்சம் என்பது, நாம் ஆவியின் கனிகளில் கூறப்பட்டுள்ள ஒன்பது சுபாவங்களால் நிறைந்து கிறிஸ்துவின் சுபாவம் நம்மில் வெளிப்பட வேண்டும். அப்படிப்பட்ட சாட்சியுள்ள வாழ்க்கை வாழும்படியாகத்தான் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் ஊற்றப்படுகிறார்.

சாட்சியாய் நிற்கும் பெலன் :

நாம் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் நிற்க வேண்டும். நம்முடைய குடும்பத்திலும், வேலை பார்க்கிற ஸ்தலத்திலும், ஊழிய ஸ்தலத்திலும், நாம் வாழ்கின்ற இடத்திலும் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் நிற்க வேண்டும். இன்று கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் நிற்க வேண்டும் என்றால் அந்த உன்னத பெலத்தினால் நிரப்பப்படவேண்டும். அன்று ஸ்தேவான் சபையின் மூப்பராக இருந்து எவ்வளவாய் வைராக்கியத்தோடு கிறிஸ்துவுக்கு சாட்சியாய் அவன் நின்றான் என்பதை அப். 7–ம் அதிகாரத்தில் நாம் பார்க்கலாம். அவன் சாட்சியாய் நின்று தன் ஜீவனையும் துச்சமாய் எண்ணினான். காரணம் அவனுக்குள் இருந்த பரிசுத்த ஆவியானவர் தான். அப், 7:55 வாசித்தால், அவன் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு அந்த நேரத்தில் மக்கள் முன்பு நின்றான் என்று பார்க்கிறோம். சில ஆண்டுகளுக்கு முன் குஜராத்தில் பாவ்கா என்ற கிராமத்தில் விசுவாசிகளுக்கு விரோதமாய் புற இன நண்பர்கள் எழும்பி மிக கடினமாய் எதிர்ப்பு தெரிவித்து பெரிய பிரச்சனையாய் மாறிவிட்டது. காவல் துறையினர் ஒரு மாதமாக அந்த காரியத்திற்கு சரியான நடவடிக்கை எடுக்காதபடியினால் கிராமத்தில் கிறிஸ்தவர்கள் மிகவும் வேதனையை அனுபவித்தார்கள். ஆனால் இவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் அபரிவிதமாய் இறங்கினார். 35 குடும்பங்களும் போலீஸ் அதிகாரியைச் சந்தித்து பேசி “எங்களை வேதனைப் படுத்தாதீர்கள். இந்த நேரமே எங்களை சுட்டுக் கொன்று விடுங்கள். நாங்கள் இந்த நிமிடமே எங்கள் இயேசுவிடம் சென்று சமாதானமாய் இருப்போம். நீங்கள் எங்கள் உடைமைகளையும், சொத்துக்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்”. என்று வைராக்கியமாய் கூறினதை பார்த்து அந்த போலீஸ் அதிகாரி மிகுந்த வியப்புடன் உங்களுக்கு பின்னால் யாரோ ஒரு பெரியவர் இருக்கிறார் என்றார். அதற்கு விசுவாசிகள் கூறின பதில் என்ன தெரியுமா? எங்களுக்கு பின்னால் யாருமில்லை, எங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்று கூறினார்கள். இவர்களுக்குள் இருக்கிற சாட்சியான வாழ்க்கையைப் பார்த்த அதிகாரி உடனடியாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தார். இன்று புதுப்பிக்கப்பட்ட ஆலயமாக அநேக ஆத்துமாக்களுடன் வளர்ந்து வருகிறது. சாட்சியாய் நிற்கும் பெலனை தருபவர் நமக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவர்தான்.

சாட்சியை அறிவிக்கும் பெலன் :

நாம் பெற்ற இரட்சிப்பை சாட்சியாய் அறிவிக்கும்படியாய் பரிசுத்த ஆவியானவர் பெலன் தருகிறார். நாம் பரம்பரையாய் கிறிஸ்தவர்களாய் இருந்தாலும் நாம் கூடி இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்க பயம், வெட்கம் உண்டாகிறது. அந்த பயம், வெட்கம் நீங்கி இயேசுவே தேவன் என்று நாம் அறிவிக்கும்படியான பெலனை பரிசுத்த ஆவியானவர் தருகிறார். எடுத்துக்காட்டாக, இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டபோது, சீஷர்கள் மிகவும் பயந்தவர்களாய் தங்கியிருந்த அறையின் கதவு ஜன்னல்களை பூட்டி வைத்திருந்தார்கள். பயம் ஆட்கொண்டது. பேதுரு மூன்று தடவை மறுத– த்து விட்டான். இயேசுவோடுகூடி இருந்த பேதுருவுக்கே பயம் ஆட்கொண்டுவிட்டது. மட்டுமல்லாமல் சீஷர்கள் கதவை பூட்டி வைத்திருந்தார்கள். ஆனால் என்றைக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தால் நிரப்பப்பட்டார்களே, உடனடியாக அவர்களுக்குள் இருந்த பயம் நீக்கப்பட்டது. இயேசுவை மறுத– த்த பேதுருவே மிகவும் வைராக்கியமாய் எழும்பி, ரோமாபுரியார், யூதர், கிரேக்கர், அரபியர் யாவருக்கும் முன்பாக எழும்பி உரத்த சத்தமாய் இயேசுவை பற்றி கூறி அப். 2:32–ல் "இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்". என்ற சாட்சி கூறினார். அன்றைய தினமே (அப். 2:41) 3000 பேர் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். இயேசவை சாட்சியாய் அறிவிக்கும் பெலன் சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்ற பின்புதான் கிடைத்தது. மட்டுமல்லாமல் உடனே பிறவி சப்பாணியை இயேசுவின் நாமத்தில் நடக்கும்படியான அற்புதத்தை செய்து இயேசுவை வெளிப்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள்.

பிரியமானவர்களே! பரிசுத்த ஆவியனவர் நமக்குள் வரும்போது நாம் அவருடைய ஆலயமாகிறோம். நாம் விடுதலையடைகிறோம். நாம் பெலனடைகிறோம். இந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரை நாம் வாஞ்சித்து பெற்று கொள்வோமாக!

"உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதங்களையும் ஊற்றுவேன்." ஏசா. 44:3. என்ற வாக்கின்படி 2008ல் உங்கள் மீதும், உங்கள் சந்ததியின் மீதும் தேவன் வல்லமையாக இறங்கி ஒவ்வொருவரையும் நிரப்பி ஆசீர்வதிப்பாராக!

## A.B.C.D..... வரிசையில் அறிந்து கொள்ளுங்கள் ஜெபத்தைப் பற்றி

| | | |
|---|---|---|
| **A**doration | ஆராதித்து ஜெபிப்பது | யோசு. 4:2 |
| **B**rivity | சுருக்கமாக | பிரச. 5:32 |
| **C**onprite Heart | நொருங்குண்ட இருதயத்தோடு | சங். 51:17 |
| **D**elight | மனமகிழ்ச்சியுடன் | சங். 37:4 |
| **E**xpectation | எதிர்பார்ப்புகளோடு | யாக். 5:17 |
| **F**asting | உபவாசத்துடன் | யோவே. 2:12 |
| **G**od's Will | தேவசித்தம் அறிந்து | I யோவான் 5:11 |
| **H**umility | தாழ்மையோடு | II கொரி. 7:4 |
| **I**n the Sprit | ஆவியிலே ஜெபம் | எபே. 6:18 |
| **J**ustice | நீதியோடு | சங். 18:4 |
| **K**indness | இரக்கத்தோடு | மத். 5:7 |
| **L**amentation | புலம்பலுடன் | யோவே. 5:17 |
| **M**eaning | கருத்துடன் | யாக். 5:17 |
| **N**atural | அதிக வசனிப்பின்றி | மத். 5:8 |
| **O**ne Mind | ஒரு மனதுடன் | கொலொ. 4:14 |
| **P**ure Heart | சுத்த இருதயத்துடன் | மத். 6:7 |
| **Q**uality | தரமுள்ள ஜெபம் | யாக். 1:6–8 |
| **R**epeatedly | திரும்ப மறுபடியும் | மத். 26:42–44 |
| **S**incerely | உண்மையாய் | சங். 145:18 |
| **T**ears | கண்ணீருடன் | சங். 56:8 |
| **U**nity | ஐக்கியப்பட்டு | அப். 4:32–34 |
| **V**ows | பொருத்தனையோடு | சங். 50:14 |
| **W**atch unto Prayers | விழித்து ஜெபிப்பது | I பேது. 4:7 |
| **X**enchil Relationship | விருந்தாளிக்கு கொஞ்சலுடன் உபசரிப்பது போல ஆராதனை செய்வது | |
| **Y**ield to the Spirit of God | ஆவியானவரின் வழிநடத்தலுட்பட்டு | ரோமர் 8:14 |
| **Z**eal for God | வைராக்கியத்துடன் | யாக்கோபு |

# கிறிஸ்துமஸ் வெகுமதிகளுக்காக நன்றி...

பிரியமானவர்களே, பணித்தளங்களில் நம் பீல் விசுவாசிகள் கிறிஸ்துமஸ், புதுவருட ஆராதனைகள் எல்லாம் மிக சிறப்பாக கொண்டாடினார்கள். இயேசு பிறந்த நற்செய்தியை பல கிராமங்களில் அறிவித்து அநேகரை இரட்சிப்பிற்குள் நடத்தினார்கள். கர்த்தர் அந்த நாட்களில் எந்தவித பிரச்சனைகள் வராதபடி ஊழியர்களையும், விசுவாசிகளையும் மற்றும் சபைகளையும் காத்துக் கொண்டார். உங்களுடைய ஜெபங்களுக்காக நன்றி கூறுகிறோம். பீல் சுதேச ஊழியர்களின் குடும்பங்களுக்கு ரூ. 1000/– மதிப்பில் மிக நேர்த்தியான புத்தாடைகள் கொடுக்க தேவன் கிருபை செய்தார். மட்டுமல்லாமல் ஊழியர்களின் பிள்ளைகள், மற்றும் விடுதிபிள்ளைகளுமாக மொத்தம் 1600 பிள்ளைகளுக்கு விளையாட்டு பொருட்கள் வாங்கி கொடுக்க தேவன் கிருபை செய்தார். இவர்கள் மேல் யாருமே கரிசனை இல்லாமல் வாழ்ந்து வந்த நாளில் இயேசு தேடி வந்தார். மேலும் நாம் கொடுத்த இந்த வெகுமதி அவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்தியது. இது உங்கள் மூலமாக தேவன் கொடுத்த சந்தோஷம். ஆகவே கிறிஸ்துமஸ் வெகுமதி கொடுத்த மிஷனெரி ஆதரவாளர்கள், குழந்தை ஆதரவாளர்கள், அவ்வபோது ஊழியத்தை தாங்கிவரும் ஆதரவாளர்கள், பிரதிநிதிகள், எல்லோருக்கும் நன்றி கூறுகிறோம். தேவன் தாமே ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து உயர்த்துவாராக.





## *ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்*

- ❖ மாதந்தோறும் ரூ.1500/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ❖ ரூ.500/-மாதம் கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ❖ ரூ.400/-மாதம் கொடுத்து ஆதிவாசி சிறுவர்களை பராமரிக்க முன் வரலாம்.
- ❖ ரூ.50,000/-கொடுத்து தேவையுள்ள இடத்தில் கிராம ஆலயம் கட்டுவதற்கு முன் வரலாம்.
- ❖ மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)** தேவைப்படுகிறது.
- ❖ ஊழியத்திற்கு செல்ல ரூ.2,000/-மதிப்பில் மிதிவண்டி **(Cycle)** 58 சுதேச ஊழியர்களுக்கு தேவைப்படுகிறது.
- ❖ பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினை பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ரூ.70/-வீதம் குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம்.
- ❖ பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- ❖ மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- ❖ மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

## களச்செய்திகள்...

*துதியுங்கள்* *(குஜராத்)*

- கடந்த மாதம் ஜெரி கோட் கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 500–க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 2 குடும்பங்கள் ஆராதனையில் கலந்து கொண்டார்கள். ஞாயிறு பள்ளியில் 180–க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள்.
- கடந்த மாதம் தேவ்கட் கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 260–க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 70 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள். புதிதாக 6 குடும்பங்கள் ஆராதனையில் கலந்து கொண்டார்கள்.
- கடந்த மாதம் கலாசியா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 70–க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 4 குடும்பங்கள் ஆராதனையில் கலந்து கொண்டார்கள்.
- கடந்த மாதம் புரக்குவா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 310–க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 3 குடும்பம் ஆராதனையில் கலந்து கொண்டார்கள்.

*ஜெபியுங்கள்* *(குஜராத்)*

- பத்தேபூரா தாலுகாவில் புதிய கிராமங்களில் ஊழியம் ஆரம்பிக்கப்படும்படியாகவும், புதிதாக ஊழியர்களை தேவன் எழுப்பித்தரும்படியாகவும் ஜெபியுங்கள்.
- முங்கா கிராம சபை விசுவாசிகளுடைய பிள்ளைகளின் படிப்பிற்காகவும், சரீர சுகத்திற்காகவும், ஞானத்திற்காகவும் ஜெபியுங்கள்.
- தஸ்லா கிராமத்தில் மின்சார வசதியை தேவன் ஏற்படுத்தி தரும்படியாக ஜெபியுங்கள்.
- தார்மி கிராம சபையில் பின் வாங்கிப்போன சபை விசுவாசிகள் மறுபடியும் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாக ஜெபியுங்கள்.

*துதியுங்கள்* *(இராஜஸ்தான்)*

- கடந்த மாதம் கோய்க்கா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 440–க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 45 பிள்ளைகள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள்.
- கடந்த மாதம் கரோடு கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 160–பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 2 குடும்பங்கள் ஆராதனையில் கலந்து கொண்டார்கள். ஞாயிறு பள்ளியில் 50 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.

- கடந்த மாதம் கதேடியா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 210–க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 8 குடும்பங்கள் ஆராதனையில் கலந்து கொண்டார்கள்.
- கடந்த மாதம் ஜெர்பாடா கிராமத்தில் 4 சகோதரர்களும் 1 சகோதரியும் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள்.

*ஜெபியுங்கள்* *(இராஜஸ்தான்)*

- சாகுவா கிராமத்தில் ஊழியத்திற்கு விரோதமாக எதிர்ப்பு தெரிவிக்கிறவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாக ஜெபியுங்கள்.
- குண்டா கிராமத்தில் அநேக மக்கள் சாராயத்திற்கு அடிமைப்பட்டுள்ளார்கள். இதி– ருந்து தேவன் இவர்களை விடுவிக்கும்படியாக ஜெபியுங்கள்.
- ஜீவகூட்டா கிராம மக்களை தேவன் பாவத்தில் இருந்து விடுதலைக் கிடைக்கும்படியாக ஜெபியுங்கள்.
- ருக்மாபேன் என்ற சகோதரிக்கு பக்கவாத நோயி– ருந்து தேவன் சுகத்தை கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

*துதியுங்கள்* *(மத்தியபிரதேசம்)*

- கடந்த மாதம்மேந்திகேடா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 315–க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 3 நபர்கள் ஆராதனையில் கலந்து கொண்டார்கள். ஞாயிறு பள்ளியில் 25–க்கும் மேற்பட்ட பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- நாகன்வாட் கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 319–க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. புதிதாக 3 குடும்பங்கள் ஆராதனையில் கலந்து கொண்டார்கள்.
- கடந்த மாதம் குஜராபாடா சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 155–க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 1 குடும்பம் ஆராதனையில் கலந்து கொண்டார்கள்.

*ஜெபியுங்கள்* *(மத்தியபிரதேசம்)*

- வால்பூர் கிராமம் முழுவதும் சந்திக்கப்படும்படியாகவும், அந்தகார வல்லமைகள் அழிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- வாவடி கிராமத்தைச் சேர்ந்த கமாபாய், முன்னாபாய், கமஜிபாய், நேதியாபாய் ஆகிய சகோதரர்கள் ஊழியத்திற்கு விரோதமாக எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாக ஜெபியுங்கள்.
- நாகன்கேடி கிராமத்தில் இருக்கிற மந்திரவாதிகள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாக ஜெபியுங்கள்.
- வரோடு சபைக்கு விரோதமாக இருக்கிற எதிர்ப்புகள் நீங்கி சமாதானத்தை தேவன் தரும்படியாக ஜெபியுங்கள்.

## பணித்தள சாட்சிகள்
தேவனுக்கே மகிமை

**சகோ. சாமன் ரட்டுவா** **தேவ்கட் (குஜராத்)**
குபேன் ரட்டுவா என்ற சகோதரி கைகளில் கட்டியினால் கை விரல்கள் அழுகிஇருந்தன. மந்திரகிரியைகள் செய்தும் எந்தவித பலனுமில்லை. பின்பு நம்முடைய சபையில் நடைபெற்ற கூட்டத்தில் சகோதரி கலந்து கொண்டு ஜெபித்த போது கையில் உள்ள அனைத்து புண்ணையும் மாற்றி தேவன் சுகத்தை கொடுத்தார்.

**சகோ. குமன்பாய் டாமோர்** **கராம்பா (குஜராத்)**
காளிபேன் பாபோர் என்ற சகோதரிக்கு திடீரென கை, கால் செய– ழந்துவிட்டது. அநேக மருந்துகள் சாப்பிட்டும் எந்தவித பலனுமில்லை. ரூ.30,000 செலவு செய்தும் சுகம் கிடைக்கவில்லை. பின்பு சகோதரியை ஆலயத்திற்கு கொண்டு வந்து ஜெபித்த போது கை, கால் செயல்பட தேவன் கிருபை செய்தார்.

**சகோ. தேசிங் ரட்டுவா** **மோட்டா ராம்பூரா (குஜராத்)**
ஹர்சிங்பாய் என்ற 20 வயது சகோதரர் 1 வருடமாக வியாதியினால் கஷ்டப்பட்டார். அதிக பணம் செலவு செய்து மருத்துவம் செய்தும் எந்தவித பலனுமில்லை. பின்பு நம்முடைய சபையில் நடைபெற்ற ஆராதனையில் சகோதரர் கலந்து கொண்டு ஜெபித்த போது சகோதரருக்கு தேவன் வியாதியி– ருந்து சுகத்தை கொடுத்தார்.

**சகோ. சாம்ஜி மேய்டா** **ஜெரி கோட் (குஜராத்)**
சங்கர்பாய் என்ற சகோதரருக்கு மறைவு பகுதியில் கட்டியினால் கஷ்டப்பட்டார். மருத்துவம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. பின்பு இயேசுவை விசுவாசித்து ஜெபித்த போது தேவன் சுகத்தை கொடுத்தார்.

**சகோ. வால்சிங் நினாமா** **சாக்வா (இராஜஸ்தான்)**
பிந்துபேன்என்ற சகோதரிக்கு 6 மாதமாக கண்கள் தெரியாமல் இருந்தது. இந்த சகோதரியை சாகுவா கிராம ஆலயத்திற்கு அழைத்து வந்தார்கள். நான் இந்த சகோதரிக்காக ஜெபித்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு சிலநாட்களில் சகோதரிக்கு கண்பார்வையை கொடுத்தார். தேவனுக்கே மகிமை.

**சகோ. கல்லா B. டாமோர்** **அம்பாபாடா (இராஜஸ்தான்)**
அந்தோன் என்ற சகோதரருடைய மகன் பேச முடியாது கஷ்டப்பட்டான். இந்த சிறுவனுக்காக ஜெபித்த போது சிறுவன் பேச தேவன் கிருபை செய்தார்.

**சகோ. வாஜி H. நினாமா** **அம்ளிபாடா (இராஜஸ்தான்)**
பாதர்பாய் என்ற சகோதரர் ஊழியத்திற்கு விரோதமாக தீவிரமாக செயல்பட்டார். ஒரு நாள் இந்த சகோதரர் சரீரம் முழுவதும் எரிச்ச– னால் கஷ்டப்பட்டார்.

மந்திரகிரியைகள் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. வியாதி அதிகரிக்கவே மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டார். இந்த சகோதரரை ஆலயத்திற்கு அழைத்து வந்தார்கள். சகோதரருக்காக அனைவரும் சேர்ந்து ஜெபித்த போது தேவன் சுகத்தை கொடுத்தார். இப்பொழுது இந்த சகோதரர் தொடர்ந்து ஆராதனையில் கலந்து கொண்டு வருகிறார். தேவனுக்கே மகிமை.

**சகோ. ஹிர்ஜிபாண்டா பட்லா (இராஜஸ்தான்)**
நாராயன் என்ற சகோதரருடைய மகன் வியாதிப்பட்டு சாகும்தருவாயில் இருந்தான் அதிகமான பணம் செலவு செய்து மருத்துவம் மற்றும் மந்திரகிரியைகள் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இறுதியில் ஆலயத்திற்கு கொண்டு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தை கொடுத்தார்.

**சகோ. துபா- யா மேடா நாகர்பூரா (மத்தியபிரதேசம்)**
ராகேஷ்பாய் என்ற 28 வயது சகோதரருக்கு 5 வருடமாக கை, கால் செய- ழந்து கஷ்டப்பட்டார். மருத்துவம் மற்றும் மந்திரகிரியைகள் செய்தும் எந்தவித பலனுமில்லை. கடைசியில் ஜெபத்தின் மூலம் சகோதரருக்கு கை, கால் செயல்பட தேவன் கிருபை செய்தார். இப்பொழுது இந்த குடும்பம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

**சகோ. ஜோகு டின்டோர் பெருகாட் (மத்தியபிரதேசம்)**
ராம்கட் கிராமத்தைச் சேர்ந்த ஜோதாபேன் என்ற சகோதரியின் மகன் அசோக் மீது ரயில் வண்டி மோதியவுடன் பிள்ளை மரித்துவிட்டது போல மூச்சியில்லாமல் கிடந்தது. உடனே இந்த சகோதரி என்னுடைய பிள்ளை பிழைத்துவிட்டால் ஆலயத்திற்கு சென்று சாட்சி சொல்லுவேன் என்று பொருத்தனையோடு ஜெபித்தாள். தேவன் பொருத்தனையின் ஜெபத்தைக் கேட்டு பிள்ளைக்கு உயிரை கொடுத்தார்.

**சகோ. கோவிந்த் மேடா தேவ்கா (மத்தியபிரதேசம்)**
ஆம்திபாடா கிராமத்தைச் சேர்ந்த கமலாபேன் என்ற சகோதரி 10 வருடமாக வியாதியினால் கஷ்டப்பட்டாள். ரூ.5,000 செலவு செய்து மருத்துவம் மற்றும் மந்திரகிரியைகள் செய்தும்சுகம் கிடைக்கவில்லை. கடைசியில் நம்முடைய சபையில் நடைபெற்ற கூட்டத்தில் சகோதரி கலந்து கொண்டு ஜெபித்த போதுதேவன் வியாதியி- ருந்து சுகத்தை கொடுத்தார்.

**சகோ. ஜெயாஸ் S. பாபோர் ஜாபதாரா (மத்தியபிரதேசம்)**
ஜாபாதார் கிராமத்தைச் சேர்ந்த அனாபேன் என்ற சகோதரி சிறு வயதி- ருந்து நடக்க முடியாமல் கஷ்டப்பட்டாள். அநேக மருத்துவம் மற்றும் மந்திரகிரியைகள் செய்தும் எந்தவித பலனுமில்லை. கடைசியில் நம்முடைய சபையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த போது சகோதரி நடக்க தேவன்கிருபை செய்தார்.



## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- நீங்கள் அனுப்புகின்ற காணிக்கைக்கு அதிகபட்சம் 15 நாட்களுக்கு மேல் ஆகியும் இரசீதும், நன்றிக் கடிதமும் வரவில்லையென்றால் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்துங்கள்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையை செலுத்தலாம்.

| வங்கி கணக்கு பெயர்<br>**Sharing Love Mission** | | |
|---|---|---|
| Tamilnad Mercantile Bank | - | 106100710400009 |
| Axis (U.T.I) Bank | - | 105010100094373 |
| I.C.I.C.I Bank | - | 613901112799 |
| Branch : Tuticorin, | | கிளை : தூத்துக்குடி |

- வெளிநாட்டில் வசிப்பவர்கள் ''V. DEVADOSS'' (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

:

## சிறப்பு சாட்சி



மிகுந்த இரக்கமும் கிருபையும், பரிசுத்தமும் நிறைந்த நல்ல ஆண்டவருக்கே மகிமையுண்டாவதாக!

எனது கணவர் திரு. ஜான்சன் ஜெபராஜ் அவர்கள் அன்பு பகிர்வு இயக்கம் (ஷாலோம்) ஊழியத்தில் தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் முன்னேற்றப்பணி செயலாளராக கடந்த 1½ ஆண்டுகளாக பணியாற்றிவருகிறார்கள்.

கடந்த 29.11.2007 அன்று காலை நானும் எனது கணவரும் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது ஏற்பட்ட விபத்தில் சங்கீதம் 18:4,5 வசனங்களில் சொல்– யபடி மரணகட்டுகளும், பாதாள கட்டுகளும் என்னை சுற்றி சூழ்ந்து கொண்டது. மரண கண்ணிகளும் என்மேல் விழுந்தது.

உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். ஆபத்து காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு என்ற வார்த்தையின்படி குடும்பமாக கூப்பிட்டோம். மேலும் எனக்காக ஆயிரமாயிரம் தேவ பிள்ளைகள், சபைகள், தேவ ஊழியர்களின் கூப்பிடுதல்களையும் தேவன் கேட்டார். நான்கு நாட்கள் மருத்துவமனையில் IMCU வார்டிலும் பத்து நாட்கள் பொது அறையிலும் அனுமதிக்கப்பட்டு இருந்த என்னை சங்கீதம் 18:19–ன்படி விசாலமான இடத்திலே கொண்டு வந்து என்மேல் பிரியமாயிருந்தபடியால் என்னை பாதாளத்தின் வல்லடிக்கு தப்புவித்து எனக்கு ஜீவனைத்தந்தார். அல்லேலூயா!

இன்று என்னை ஒரு ஜீவனுள்ள சாட்சியாக நிறுத்திய எல்லா நாமத்திற்கும் மேலான நித்யானந்தமுள்ள ஏக சக்கராதிபதியான நம் கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக. எனக்காக கண்ணீரோடும் பாரத்தோடும் ஜெபித்து என்னை விசாரித்த உங்கள் ஒவ்வொருவருக்கும் குடும்பமாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அல்லேலூயா! ஆமென்!

**J. அபிஷேக செல்வி**
**W/o. J. ஜான்சன் ஜெபராஜ்**

*வெண்ணங்கி தரித்தோர் வரிசையில்*

பெயர் : **திருமதி. ரூபி. வின்ஸ்டன்**

பிறப்பு : **28.04.1942**, இறப்பு : **16.12.2007**



முன்னாள் நெல்லை திருமண்டல பெண்கள் ஐக்கிய சங்க செயலரும், பாளையங்கோட்டை மேரி சார்ஜன்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளி உதவித் தலைமை ஆசிரியருமான திருமதி. ரூபி வின்ஸ்டன், **16.12.2007** அன்று தான் வாழ்நாள் முழுவதும் சேவித்த இறைவன் இயேசுவின் நித்திய வாழ்வின் அழைப்பைப் பெற்றவர்களாய் அவரோடுகூட என்றும் இருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டார்கள். அவர்கள் கணவர் திரு. வின்ஸ்டன், முன்னாள் கதீட்ரல்பள்ளி தலைமை ஆசிரியர், நமது தூத்துக்குடி ஷாலோம் தலைமை அலுவலகத்தில் மூன்று ஆண்டுகள் Hon. Administrator ஆக நற்பணியாற்றினார்கள். அன்பான Uncle, Aunty இருவரும் நம் குஜராத் பணித்தளத்திற்கு வந்து ஊழியங்களைப் பார்வையிட்டு தேவனைத் துதித்தார்கள். மேலும் பணித்தளங்களில் ஆலயங்கள் கட்டப்படவும், மிஷனெரிகள் மற்றும் ஆதிவாசி குழந்தைகளைத் தாங்கவும் அநேக இடங்களில் ஷாலோம் ஊழியங்களை அறிமுகம் செய்துள்ளார்கள்.

Aunty-யை பிரிந்து இருக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கு இயேசுவின் நாமத்தில் ஆறுதலும், சமாதானமும் உண்டாக தேவனை வேண்டிக் கொள்ளுகிறோம்.

## திருத்தங்கள்

கடந்த ஜனவரி மாத அன்பு பகிர்வு இயக்கம் மாத இதழில் முன் மற்றும் பின் அட்டையின் உள்பக்கங்களில் வெளியிடப்பட்டிருந்த சுதேச ஊழியர் சாட்சி மற்றும் கிராம ஆலயம் ஆகியவற்றின் தலைப்புகளில் சகோ.கமலேஷ் சங்காடா – விற்கு பதிலாக, சகோ. மேதா டோடியார் என்றும், கேடி கிராம ஆலயம் – என்பதற்கு பதிலாக உஸ்வானியா கிராம ஆலயம் என்றும் தவறாக அச்சிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். தவறுகளுக்கு மன்னிக்கவும்.

–ஆசிரியர்

# *மேரி ஜோன்ஸ்*

மிஷனெரி முன்னோடிகள்



வேல்ஸ் நாட்டில் இலான்பிரன்ஜல் என்ற சிற்றூரில் 1792 ஆம்ஆண்டு நெசவு தொழில் புரிந்து வந்த தம்பதியருடைய ஒரே மகள் தான் மேரி ஜோன்ஸ். அந்நாட்களில் வேதாகமம் கிடைப்பதே அரிது. அப்படி கிடைத்தாலும் ஏழை, எளியோர் விலை கொடுத்து வாங்குவதற்கியலாது. சிறுமியாக இருந்தது முதற்கொண்டு வேதாகமத்தின் பேரில் மேரிக்கு ஒரே உயிர். அதைப் படிக்கும்படியாக தன் வீட்டி– ருந்து இரண்டு மைல்களுக்கு அப்பா– ருந்த அவளுடைய பெற்றோருக்கு அறிமுகமான ஒரு செல்வந்தரின் வீட்டிற்கு அடிக்கடி செல்வாள். எத்தனையோ அதிகாரங்களை மனப்பாடமாகப் படித்தாள்.

மேரி தனக்கெனச் சொந்தமாக ஒரு வேதப்புத்தகம் வாங்கிக் கொள்ளும் பொருட்டு தன் வீட்டி– ருந்த கோழிகளை நன்கு கவனித்து, அவற்றின் மூலம் வந்த முட்டைகளை விற்று சேமித்து வைத்துக் கொண்டே இருந்தாள். இங்ஙனம் ஆறு ஆண்டுகள் கடந்தன. புதிய வேதாகமம் ஒன்று வாங்கக்கூடிய நிலைக்கு வந்துவிட்டாள். இப்பொழுது மேரி பதினாறு வயதடைந்த ஓர் இளம் பெண். வேதாகமத்தை எங்கு சென்று வாங்குவது என்ற வருத்தத்தோடு இருந்த அவளிடம் "பாலா" என்னும் ஊரில் ஒரு போதகரிடம் போனால் வாங்கலாம். ஆனால் அந்த இடத்திற்கு இருபத்தைந்து மைல்கள் நடக்க வேண்டுமே. அது முடியாத காரியம் என்பதாக கூறினர். மேரியோ "என் அருமை ஆண்டவர் என்னோடு இருக்கிறார். எனக்குப் பயமில்லை" என உறுதியுடன் கூறினாள். மேரி புறப்பட வேண்டிய அந்நாளும் வந்துவிட்டது. அதிகாலையில் மகிழ்ச்சி பொங்க தேவனை நோக்கி ஜெபித்தாள். வெறுங்கா– ல் வேகமாக நடந்தாள். இருட்டும் வேளையில் மேரி, பாலா என்னும் ஊரை அடைந்து எட்வர்ட் என்னும் அவ்வூர் போதகரிடம் தான் வந்ததன் காரணத்தை வரிவாய்ச் சொன்னாள்.

மறுநாள் காலை எட்வர்ட் போதகர் மேரியை தாமஸ் போதகர் வீட்டிற்கு அழைத்துச் சென்று “இவ்விளம் பெண் மேரி இலான்பிரன்ஜல் என்னும் சிற்றூரி– ருந்து ஒரு புதிய வேதாகமம் வாங்கும்படி இருபத்தைந்து மைல்கள் நடந்தே வந்திருக்கிறாள்” என்றார். இதைக் கேட்ட தாமஸ் போதகரின் மனம் வெகுவாக உருகிற்று. சற்று நேரம் அமைதலுடன் பேசாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். சற்று நேரத்திற்குப் பின் அப்போதகர், எட்வர்ட் போதகரைப் பார்த்து, “இப்பொழுது இப்பெண்ணுக்கு வேதாகமத்தைக் கொடுக்கும்படியான நிலையில் நான் இல்லையே; இது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. சிலருக்கு ஏற்கனவே தருகிறேன் என வாக்கு பண்ணியிருக்கிறேன்.” என துக்கத்துடன் கூறினார். இதைக் கேட்டதும் மேரியினால் தாங்கவே முடியவில்லை. சத்தமாகத் தேம்பி தேம்பி அழ ஆரம்பித்துவிட்டாள். வேதாகமம் இல்லாமல் வெறுமையாக திரும்பி செல்லவேண்டியதை நினைத்து கதறினாள். தன் இரு கரங்களினாலும் தன் முகத்தை மூடிக் கொண்டு அழுதாள். இக்காட்சி மெய்யாகவே சங்கை தாமஸ் சார்லஸ் போதகரின் மனதின் ஆழத்தையே தொட்டுவிட்டது. திடீரென உள்ளே போய் புதிய வேதாகமங்களில் ஒன்றை எடுத்து வந்து எஎன் அருமை மகளே, அழாதே இந்தா இந்த வேதாகமத்தைப் பெற்றுக் கொள். எனச் சொல்– அவளைத் தேற்றினார். மேரிக்கு கட்டுக்கடங்கா மகிழ்ச்சி. எப்படி அப்போதகருக்கு நன்றி சொல்வதெனக் கூட அவளுக்குத் தெரியவில்லை. மகிழ்ச்சி பொங்க அன்றே தன் ஊருக்குத் திரும்பினாள். புதிய வேதாகமத்துடன் தம் மகளைக் கண்ட பெற்றோர் அன்பு ததும்ப அவளை அணைத்தனர். உடனே அவர்கள் யாவரும் முழங்காற்படியிட்டனர். மேரி பயபக்தியுடன் மெதுவாக தன் புதிய வேதாகமத்தைத் திறந்து 150 ஆம் சங்கீதத்தை வாசித்தாள். ஆனந்தக் கண்ணீர் அவள் கண்களி– ருந்து தாரை தாரையாக வழிந்தது. பிற்காலத்தில் வரித்தானியா சர்வதேச வேதாகம சங்கம் ஆரம்பிக்கப்பட தன்னுடைய வாழ்க்கையின் இச்சம்பவமே காரணமாயிருக்க போகுமென அச்சமயம் இந்த இளம் பெண் மேரி சற்றும் அறியவில்லை.

## பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **மெருளா டாமோர்** |
| தகப்பனார் பெயர் | : | எத்தர்சிங் டாமோர் |
| தாயார் பெயர் | : | நர்மதாபேன் டாமோர் |
| பிறந்த நாள் | : | 20–01–2002 |
| படிக்கும் வகுப்பு | : | I Std. |
| சொந்த ஊரின் பெயர் | : | தாத்கட் |
| தாலூகா | : | ஜாலோத் |
| மாவட்டம் | : | தாகோத் |
| மாநிலம் | : | குஜராத் |
| படிக்கும் பள்ளி | : | I.P. Mission School - Jhalod |
| தங்கி படிக்கும் விடுதி | : | I.P. Mission - Jhalod |

மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

இவளுடைய தகப்பனார் எத்தர்சிங் டாமோர் இயேசுவைப் ஏற்றுக் கொள்ளுவதற்கு முன்பதாக விக்கிரகங்களை வழிபட்டு பலவிதமாக பூஜைகளை செய்துவந்தார். 1993 ஆம் வருடம் இவருக்கு கட்டி வந்து மிகவும் வேதனைப்பட்டார். மருத்துவரிடம் சென்று மருத்துவம் செய்தும் மற்றும் மந்திர கிரியைகள் பல செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இவருடைய கிராமத்திற்கு சந்துபாய் என்ற ஷாலோம் ஊழியர் சென்றபோது இவரிடம் இந்த வியாதியை மந்திரவாதத்தினால் சுகமாக்க முடியாது. ஆனால் இயேசுவால் சுகமாக்க முடியும் என்று கூறினார். இவரும் ஊழியருடைய வார்த்தைகளை விசுவாசித்து ஆலயத்திற்கு செல்ல ஆரம்பித்தார். இதன்மூலம் இவருக்கு பரிபூரண சுகம் கிடைத்தது. இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். தேவ சமாதானம் இவரது குடும்பத்தை நிரப்பியது. இப்போது தாத்கட் கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-

மெருளா நன்றாக படிப்பாள். நன்றாக ஜெபம் பண்ணுவாள். படித்து முடித்து பின் ஊழியக்காரியாக வேண்டும் என்ற வாஞ்சை உண்டு.

ஜெபியுங்கள் :-

இவளுக்கு தேவன் விசேஷித்த ஞானம் மற்றும் சுகம் கொடுக்கவும், ஆவிக்குரிய வாழ்க்கைக்காகவும், பெற்றோர் செய்கிற ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

இச்சிறுமியைத் தாங்குபவர் : **Mr. Justin Merlin,** Gobichettipalayam.

(இந்த சிறுமியைப் போல் இன்னும் 131 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)

## நாட்டு நடப்புச் செய்திகள்....

தமிழகத்தின் வீரவிளையாட்டான ஜல்– க்கட்டு ஆண்டுதோறும் மாட்டுப் பொங்கல் அன்று தமிழகத்தின் பல இடங்களில் நடைபெறும். இந்த விளையாட்டை ரசிப்பதற்கு உலகெங்கிருந்தும் ரசிகர்கள் வருவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு மாடுகள் இந்த விளையாட்டின் மூலம் சித்திரவதை செய்யப்படுகின்றன எனக்கூறி இதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் சுப்ரீம் கோர்ட் இந்த விளையாட்டிற்கு தடை விதித்திருந்தது. இதனால் ரசிகர்களும், வீரர்களும் மிகவும் வேதனையோடு காணப்பட்டனர். ஆனால் இறுதியாக சுப்ரீம் கோர்ட் இதற்கு விதிக்கப்பட்ட தடையை விலக்கியது. எனவே இந்த ஆண்டு "பாலமேட்டில்" மிக மகிழ்ச்சியுடன் அதிகாரிகளின் கண்காணிப்பில் இந்த விழா கொண்டாடப்பட்டது.

பாகிஸ்தானில் டிசம்பர் மாதம் நடந்த பக்ரீத் தொழுகையின்போது அதில் கலந்துகொண்ட பாகிஸ்தானின் முன்னாள் அமைச்சர் அப்தாப் அகமதுகானை கொல்ல தற்கொலை படை குண்டுகளை வெடிக்கச் செய்து தாக்குதலை நடத்தியது. இதில் அதிர்ஷ்டவசமாக அப்தாப் அகமதுகான் உயிர்தப்பினார். இச்சம்பவத்தில் 54பேர் ப– யானார்கள். இவரைக் கொல்ல இந்தத்தாக்குதல் கடந்த ஆண்டில் இரண்டாவது முறையாக நடத்தப்பட்டதாகும்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பாகிஸ்தானின் முன்னாள் அதிபர் பேநசீர் புட்டோ ராவல்பிண்டியில் தற்கொலை படையினர் மூலம் படுகொலை செய்யப்பட்டார். இதனால் பாகிஸ்தான் முழுவதும் பெரும் வன்முறை வெடித்தது. இதன் பின்னர் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் புதிய தலைவராக பேநசீர் புட்டோவின் 19வயது மகன் பிலாவல் புட்டோ பொறுப்பேற்றுள்ளார்.

உலகின் மிகக் குறைந்த விலைக் கார் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் கார் தயாரிப்பில் முன்னணி நிறுவனமான டாடா நிறுவனம் இந்த குறைந்த விலைக் காரை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஆண்டில் இந்தக் கார் விற்பனைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காரின் மதிப்பு வெறும் 1 லட்சம் ரூபாயாகும். இதன் மூலம் காரின் விற்பனை 65% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2007ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ம் தேதி சீனாவின் ஜுஹாயில் நடந்த கார் பந்தயத்தில் அந்த ஆட்டத்தின் உலகக் கோப்பையாகக் கருதப்படும் ஏ1ஜி.பி பட்டத்தை நரேன் கார்த்திகேயன் வென்றார். இந்தப்பட்டத்தை வென்ற முதல் இந்தியர் இவர். இந்த வெற்றி, உலக கார் பந்தையங்களில் இந்தியாவின் கொடி உயர்வதையே குறிக்கிறது. 2010ல் இந்தியாவில் எஃப்1 போட்டியை நடத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.




இராஜஸ்தான் மாநிலம் பான்ஸ்வாடா மாவட்டத்தில் உள்ள கிராமம் பாக்கா கூட்டா. இந்த கிராமம் நகரத்திலிருந்து மிகவும் உள்ளடங்கிய பின்தங்கிய கிராமம். இங்கு வாழும் மக்கள் இறந்த ஆவிகளை வணங்குபவர்கள். இவர்கள் தொழில் சாராயம் காய்ச்சுவதும், திருடுவதும், இந்த சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் சகோ. சுரேஷ்பாரியா.

இந்த சகோதரர் இரவு நேரத்தில் தூக்கத்தில் சூடுகாட்டிற்குச் சென்று விடுவார். இவர் குடும்பத்தில் மிகவும் வறுமை மற்றும் வியாதியினால் கஷ்டப்பட்டார்கள். கோய்க்காவிலுள்ள நமது ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. பாதர்பாரியாவிடம் வந்து ஜெபித்தபோது பிசாசின் பேராட்டங்களிலிருந்து தேவன் விடுதலைக் கொடுத்தார். தூக்கத்தில் சூடுகாடு போகும் பழக்கத்திலிருந்தும் முற்றிலுமாக தேவன் விடுதலைக் கொடுத்தார். 1995 ஆம் ஆண்டு முழு குடும்பமும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சபைக்கு வந்தனர். குடும்பத்திலிருந்த வறுமை, வியாதி நீங்கி ஆசீர்வாதம் கிடைத்தது. தேவனுக்கு ஊழியம் செய்ய தன்னை ஒப்புக்கொடுத்தார். தன்னுடைய வீட்டிலே ஆராதனையை ஆரம்பித்தார். இதுவரை 25 குடும்பங்களை ஆண்டவருக்குள் வழிநடத்தியிருக்கிறார். தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்டுவதற்கு காணிக்கையாக கொடுத்தார். அந்த இடத்தில் தேவநாமம் மகிமைக்காக சென்னையை சேர்ந்த திரு. சற்குணராஜ் அவர்கள் குடும்பத்தின் சார்பாக அளிக்கப்பட்ட நிதி உதவியில் ஒரு அழகிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449
Postal Regn. No. TTN-07/2006-2008
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28 of every month



சகோ.வே.தேவதாஸ், சகோதரரி வஹிதா தேவதாஸ்
டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா

புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக் கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை - பரி.பவுல் (ரோம.15:18)

## SHARING LOVE MISSION

**HEAD OFFICE**
168/5 Caldwell colony, 3rd street,
Tuticorin 628 008, Tamil Nadu.
Ph : 0461 2375468
Cell : 9345675468

**FIELD OFFICE**
Shalom, Christian Kamdar Society,
Dahod 389 151, Gujarat.
Ph : 02673 325468
Cell : 09377445468

email : info@shalommission.in
website : www.shalommission.in

Owned and published by V.Devadoss from 168/5 Caldwell Colony, 3rd Street, Tuticorin 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59 Palaymkottai Road, Tuticorin 628 008. Editor : V.Devadoss